பதிவுபெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி: 356

புத்-அசு]   யாழ்ப்பாணம்:-   ஆனந்த ஞூ ஆனிமீ உக-உ வெள்ளிக்கிழமை   (5-7-1974)   [இல: கஉ

வடபகுதி வளாகத்திற்கு

# 'இராமநாதன் வளாக'மெனப் பெயர் சூட்டுக.

## சைவப் பெரியார் அரங்கு ஒருமனதாக வேண்டுகோள்

எதிர் வரும் ஆவணித் திங்களில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட விருக்கும் பல்கலைக்கழக வடபகுதி வளாகத்திற்கு "இராமநாதன் வளாகம்" என்று பெயர் சூட்டப்படல் வேண்டுமெனவும், இவ்வளாகத்தின் தலைவராக சைவ நெறியை அனுட்டிக்கும் பேராசிரியர் ஒருவரை நியமித்தல் வேண்டும் எனவும் 3-7-74 அன்று நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் சிறீல-சிறீ. சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள் தலைமையில் நடாத்தப் பெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் வடமாநில உதவ அரசாங்க அதிபர் தி. முருகேசம்பிள்ளை சைவவித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் எஸ். ஆர். கனகநாயகம், சைவபரிபாலன சபைத்தலைவர் நம. சிவப்பிரகாசம் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

ஸேர், பொன். இராமநாதன் அவர்கள் ஒரு சிறந்த கல்விமான், ஒரு தத்துவஞானி. கல்வியின் நோக்கம் இறைவனுடைய திருவடி வணக்கமாகவிருக்க வேண்டுமென்ற நோக்கத்தை நன்குணர்ந்தவர், திருவள்ளுவனுடைய அருள் வாக்கை அவர் பின்பற்றினர்.

கற்றத னாலாய பயனென்
கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்.

மெய்யுணர் வினையுடைய இறைவனுடைய பாதங்களை ஒருவன் வணங்கானுயின் அவனுடைய கல்வியினுல் ஒருபயனுமில்லை.

பரமேசுரனுடைய திருவடிக்கன்பு செலுத்துதலே கல்வியின் நோக்கமாக அமைய வேண்டுமென்பதற்காகவே தாம் திருநெல்வேலியில் நிறுவிய கல்லூரிக்கு பரமேசுவரக் கல்லூரி என்ற திருநாமத்தைச் சூட்டினுர்.

கல்லூரிக்கருகாமையில் பிள்ளைகளுடைய வழிபாட்டுக்காக ஒரு சிவாலயத்தையும் நிறுவினுர். இத்தகைய சூழ்நிலையைக் கொண்ட ஒருதானத்தில் வளாகம் நிறுவப்படப்போகின்றது. பரமேசுவரக் கல்லூரியை நிறுவிய அப் பெரியாரின் ஞாபகமாக அரசாங்கம் நிறுவப் போகின்ற வளாகத்தை "இராமநாதன் வளாகம்" என்ற நாமத்தைச் சூட்டுதல் நன்றியறிதலாக விளங்கும்.

'எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் பிள்ளைகள் கொல்லாமை புலாலுண்ணாமை அநுட்டித்துக் கல்வி பயில வேண்டுமென்ற தூய நோக்கத்தைக் கொண்டவர். நாம் பத்திரிகைகளிலே படிக்கின்றவண்ணம் ஸ்ரீலங்காவின வளாகங்களிற் காணப்படும் தீய பழக்கவழக்கங்கள் துன்பங்கள் நிகழாதிருப்பதற்கு மாணவரிடையே இந்து கலாசாரத்தைப் பரப்புவதற்கு அநுகூலமாக இவ் வளாகத்தின் தலைவராக இந்து சமயத்தைச் சார்ந்த வரை நியமிப்பது மிகவும் பொருத்தமாகும்.

— — —

### திருத்தொண்டு யாத்திரை முடித்து ஆதீனம் திரும்பிவிட்டனர், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

தாய் நாடு செல்லும்பொழுதெல்லாம் ஓய்வின்றிச் சமயத்துக்கும் மொழிக்கும் உழைக்கும் நெறியில் நிற்கும் நல்லை ஆதீனத் தம்பிரான் சுவாமிகள் அண்மையில் மதுரை மீனுட்சியம்பாள் பெருவிழாக் காலத்திலும், திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரியர் விழாவிலும் கலந்து அரிய சொற்பெருக்குகள் தொடர்ந்தாற்றித் தெய்வத் தொண்டுபுரிந்து நல்லை ஆதீனத்துக்கு மறுபடியும் திரும்பி ஆதீன அலுவல்களை ஆற்றிவருகின்றனர்.

சுவாமிகளினது தென்னிந்தியப் பயணம் முற்றிலும் சமயப் பிரசாரத் தொண்டாக விளங்கியதென்பதை ஆங்கு இந் நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றோர் களிப்புடன் கூறப் பலர்கேட்டிருக்கின்றனர். வாழ்க ஆதீன மாண்பு.

## மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த பெரியார்

[ பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்]

பாண்டித்துரைத் தேவர் மதுரையில் நான்காவது தமிழ்ச் சங்கம் நிறுவுதற்கு முன், யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. இது இரண்டாவது தமிழ்ச் சங்கம். யாழ்ப்பாணத்து முதலாவது தமிழ்ச் சங்கம் பரராசசேகரன் காலத்தில் நிறுவப்பட்டது. அதில் அரசகேசரி தலைமைப் புலவராய் வீற்றிருந்தார். இரண்டாவது சங்கத்தில் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் தலைமைப் புலவராய் வீற்றிருந்தார்கள். சங்கத்தின் அக்கிராசனர் நாவலர் தமையனுர் புத்திரர் ஸ்ரீமத். த. கைலாசபிள்ளை அவர்கள்.

இச் சங்கம் பண்டிதர், பாரதி முதலிய இலவச வகுப்புக்கள் வைத்து நடத்தியது. தொடக்க காலத்தில் சங்கத்திற் படித்துப் பண்டித பரீட்சையில் தேறியவர்களுள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள் திரு. வேதாரணியர் அவர்கள். இவர்களுக்குச் சமஸ்கிருத அறிவும் உண்டு. இவர்கள் குரல் மிக இனியது; புராணத்துக்குப் பயன் சொல்லுவது வெகு அழகாயிருக்கும்;

பரம்பரைச் சைவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் திரு. மு. வேதாரணியர் அவர்கள். மண்ணில் நல்ல வண்ணம் நீண்ட காலம் வாழ்ந்து நற்கதி எய்தியிருக்கின்றார்கள்.

அவர்களின் ஆத்மா சாந்தி யுறுவதாக.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 23-6-74
சி. கணபதிப்பிள்ளை.

## பண்ணிசை பரவசப்படுத்தும்

"பண் படிப்பவர்களையும் கேட்பவர்களையும் பரவசப்படுத்தும் பண்ணை இசையோடு கருத்தொன்றிப் பாடுவது முக்கியம். பண்களைக் கட்டளைகளுக்கு அமைவாகப் பழைய பாரம்பரியத்தைப் பேணிப் பாடச் செய்வதே பண்ணிசை மன்றத்தின் முக்கிய நோக்கம்'' இவ்வாறு, கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் நடைபெற்ற பண்ணிசை மன்ற நிர்வாக மாநாட்டுக்குத் தலைமைதாங்கிப் பேசிய வைத்திய கலாநிதி க. சிவஞானரத்தினம் குறிப்பிட்டார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் பண்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை மன்றத் தனுதிகாரியால் வாசிக்கப்பட்டது. புலவர்மணி த. குமாரசாமிப்பிள்ளை பேசுகையில் "பண்களைக் கட்டளைகளுக்கமைவாகவே படித்தல் வேண்டும், மக்களை மகிழ்விக்க வேண்டுமென்பதற்காக வரன்முறையை மாற்றக்கூடாது. பண்ணிசை மன்றத்தில் கட்டளைகளைப்

வளர்ச்சி 2-ம் பக்கம்

## இசை இறைவனை அடைவிக்கும்

கல்வி அதிபதி தி. மாணிக்கவாசகர்

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால் என்றும், நான் ஆர்! என் உள்ளம் ஆர் என்றும் இறைவனைப் பார்த்து இசையின் பெருமையை எடுத்துரைக்கின்றார் மாணிக்கவாசகர். தமிழையும் சைவத்தையும் இசையையும் வளர்ச்சியடையச் செய்வதற்கு வடபகுதியில் அமையவுள்ள பல்கலைக் கழக வளாகம் நல்ல துணை செய்யும். இன்னிசை பாடி இறைவனை அடைதல் சிறந்த பக்திமார்க்கமாகும். இசை இறைவனை அடைவிக்கும்''

சைவபூஷணம் நல்லபிள்ளை நாகமுத்து ஆசிரியையின் சங்கீத கதாப்பிரசங்க அரங்கேற்ற வைபவத்தில் ஆசியுரை நிகழ்த்திய வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காரைநகர் மணற்காட்டு அம்மன் ஆலய முன்றலில் நல்லை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

### திருமுறைக்கச்சேரி

வட்டுக்கோட்டையில் திருமுறை பண்ணிசை வகுப்பு சென்ற இரு வருடங்களாக நடைபெற்று வருகின்றது. மேற்படி வகுப்பின் பூர்த்தியை முன்னிட்டு வகுப்பு நிர்வாகிகள் இவ்வருடம் 12 ஆலயங்களில் மாதமொரு பண்ணிசைக் கச்சேரியை நடாத்தத் தீர்மானித்துள்ளனர். அவ்விதம் கச்சேரிகளை ஒழுங்கு செய்ய விரும்புகின்றவர்கள், வட்டுக்கோட்டைக் கிராம சபைக்கு அண்மையிலுள்ள திருமுறைப் பண்ணிசை இயக்குநருடன் தொடர்பு கொள்ளலாம்.

— —

### கந்தபுராண விரிவுரை

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மாவை கந்தன் ஆலய உற்சவத்தின்போது தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு கந்தபுராண விரிவுரை நடாத்துவார்கள். இந் நிகழ்ச்சி 7-ஆம் திகதி ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவராயினர் வீழ்கதண்புனல்
வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஞு ஆனி மீ உக-உ வெள்ளிக்கிழமை [1974]

## வரும் வளாகத்திற்கு மரபொன்று வைப்போம்

அவனன்றி ஓர் அணுவும் அசையாதெனும் அமுத வாக்குக்கு எடுத்துக்காட்டு இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாக வரலாறு. 'ஆகு நாளன்றி ஆகாதென்ற ஆன்றோர் மொழியின் பொழிப்பை இது விளக்குகின்றது. ஆகவே 'ஒரு பொல்லாப்பும் இல்லை. வருங்காரியங்களை அரனருள்வேண்டி அமைப்பதே கற்றோர் கடமை.

இராமநாத இலட்சியத்தின் எதிரொலியே இவ் வளாகத்தை உருவாக்கும் எண்ணம். அந்தத் தூய குறிக்கோள் இந்த வளாக வளர்ச்சியிற் காணக்கூடியதாக இருத்தல் இன்றியமையாததென்பதை யாம் எடுத்தாள வேண்டியதில்லை. வளாக வளர்ச்சிக்குரிய ஏதுக்களில் அந்த இயக்கத்தை இயக்கும் அதிபரின் ஆற்றல் அநுபவம் நாட்டுக்குரிய பழம் மரபுச் சால்புடைத்தாதல் மிக முக்கியமாகும்;

கிழக்குக்குரிய சால்பொன்றுண்டு; அது தனிப் பெருமையுடைத்து. தொல்லுக நல்வாழ்வுக்குரிய செல்வச்சீலம் என்றழைக்கப்படுவது. ஈழத்தின் பழம் பெருமையை வாழ்க்கைமரபில் வகுக்கும் சமயஒழுக்க நெறியே இந்தப் பண்பைப் பல்கலைக் கழக மாணுக்கர்களிற் பிரதிவிம்பிக்கச்செய்யும் தத்துவமுடையதாயிருக்கும். இதை எவரும் மறுக்கமாட்டார்கள். எனவே இவ் வளாகத் தலைவராக வருபவர் சைவசமயியாயிருத்தல பொருத்தமாவதுமன்றி மக்கள் கருத்துமாகுமென்று கூறுகின்ருேம்.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறந்த விவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு"

○ * ○

## மௌனத் தியானம்

ஸ்ரீ யோக சுவாமிகள் ஒருமுறை ஒரு வித்தியாசாலை விடுதிச் சாலைக்குச் சென்ருர். அங்குள்ள விடுதி மாணவர்களைத் தரையில் சுகாசனமாக விருந்து மௌன சாதனை புரியும்படி கட்டளையிட்டார். அவர்கள் ஐந்து நிமிடம் வரை மௌனமாக விருந்தார்கள். சுவாமிகள் ஆங்கிருந்த ஆசிரியரைப் பார்த்து "இப் பிள்ளைகள் இவ்விதமாகத் தினமும் காலை மாலை ஐந்து நிமஷம் மௌனமாகவிருந்து பழகப் பயிற்சியளித்தல் வேண்டும்" எனக் கூறினர், சுவாமிகள் இச் சாதனையை அவரிடம் செல்லும் அடியார்களுக்குப் பழக்கி வந்தமையை யாவரும் அறிவர்.

மௌனம் உள்ளத்தின் வேகத்தைத் தடுக்க உதவும். உள்ளத்தின் வேகத்தைத் தடுப்பது மிகவுங் கஷ்டம். அதனை ஒருவன் படிப்படியாக அச் சாதனை மூலம் பெற்றுக்கொள்ளலாம். "வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" என மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய் மலர்ந்துள்ளனர்.

பள்ளிக்கூடங்களில் உடற் பயிற்சிக்கு டிறில், உதைப் பந்தாட்டம், கிறிக்கற் போன்ற விளையாட்டுகள் பிள்ளைகளுக்கு உதவுவதுபோல உளப் பயிற்சிக்கு மௌனத் தியானம பெரிதும் பயன்படும். மௌனத் தியானம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும். நற் சிந்தனைகளை உதிக்கச் செய்யும். மாணவர்களிடையே காணப்படுகின்ற தீய பழக்கங்கள் துன்பங்கள் கீழ்ப்படிவின்மை ஆகிய தீய சக்திகளெல்லாம் மௌனத் தியானத்தினுல் மறைந்துவிடும்.

யாழ்ப்பாணத்தில் 1918-ம்ஆண்டு டிசம்பர் மாதத்தில் மூன்றுநாட்கள் தொடர்பாகக் கடும்மழை பெய்தபொழுது ஸ்ரீ யோகசுவாமிகள் அவருடைய ஆச்சிரமத்துக்கருகில் நிற்கும் இலுப்பை மரத்தடியில் மௌமாக அசையாமல் உணவுமின்றி வீற்றுமிருந்தார்கள், குளிரோ, பசியோ அவருக்குத் துன்பம் புரியவில்லை அவ்விதமான அற்புத சாதனையை அவர் நடத்துவதற்கும் அற்புதங்களைப் புரிதற்கும் அருள்வாக்குகளை வழங்குதற்கும் அவருடைய மௌன சாதனையே துணையாக விருந்தது. 1927 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியடிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்தபொழுது ஸ்ரீ யோகசுவாமிகள் அவரை அவர் தங்கியிருந்த இல்லத்தில் சந்தித்தார். அன்று காந்தியடிகளுடைய மௌன தினம். யோகர் சுவாமிகள் அவருடன் உரையாடியபொழுது காந்தியடிகள் எழுத்துமூலம தமது கருத்துக்களைத் தெரிவித்ததாக அறிந்தோம். மகாத்மா காந்தியடிகளுடன் இருந்தபொழுது இமயமலைக்கருகில் இருந்ததுபோன்ற அநுபவம் தமக்கு உண்டாயிற்றென யோகர் சுவாமிகள் கூறினதைக் கேட்டிருக்கின்ருேம். மகத்தான தோற்றமும் நிலை பெயராமையும் ஆகிய பண்புகளை ஸ்ரீ யோகர் சுவாமிகள் காந்தியடிகளிடத்தில் கண்டமையினுல் இவ் வுபமானத்தின்மூலம் அவர் காந்தியடிகளுடைய பெருமைகளை விளக்கினர். அவர்கள் இருவரும் ஆற்றிய புகழ்மிக்க தொண்டுகளுக்கு மௌனசாதனையே கருவியாக விருந்தது.

நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு வித்தியாசாலையிலுங் கல்வி கற்கும் மாணவர்களுக்குத் தினமும் கடவுள் வழிபாட்டுடன் ஐந்து நிமிட மௌனத் தியானத்தையும் ஓர் அப்பியாசமாக வைத்துக்கொள்ளுதல் பெரும் நன்மைக்குக் கருவியாகும்.

"அடக்க மமாருளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்".

பிள்ளைகளுக்குச் சிறு வயதிலேயே அடக்கம் என்னும் பண்பு மௌனத் தியானத்தால் உண்டாகும். அடக்கம் ஒருவனைத் தேவ வுலகில் சேர்த்துவிடும். அடங்காமை ஒருவனை நிறைந்து இருளில் சேர்த்துவிடும். இன்பமாக வாழ அடக்கம் வேண்டும். அத்தகைய பெருமை வாய்ந்த அடக்கத்தை மௌனத் தியானத்தினுல் நாம் அடையலாம்

## ஆண்டவன் அருளைப் பெறும் பணியை மேற்கோள்வாயாக.

"மிகவும் கண்ணியம் வாய்ந்த ஐயா, பத்தாவது வகுப்புக்கு ஆறு தடவை எழுதினேன். துரதிஷ்டவசமாய் அத்தனை தடவையும் பரீட்சையில் தவறிவிட்டேன். இதுதான் எனது யோக்கியதாம்சம். பெற்ருேர்கள் தரித்திர நாராயணர்கள். பிள்ளைகுட்டிகள் அநேகம், ஏழ்மை தாண்டவமாடுகிறது. தர்மதுரை தான் இரக்ஷிக்கவேணும் பிரபுவே, தாங்களே என்னைக் காப்பாற்றவேண்டும். மேலும் படிக்க வசதி இல்லை. கண்ணியம் வாய்ந்த தங்கள் அலுவலகத்தில் உத்தியோகம காலியாயிருக்கிறதென்று தெரிந்துகொண்டேன் அந்த காலியான உத்தியோகத்திற்கு என்னை ஓர் அபேட்சகனுக மனுச்செய்துகொள்ளுகிறேன். அவ்வுத்தியோகத்தை எனக்கு வழங்கும்படியாகக்கேட்டுக்கொள்கிறேன். இத் தரும கைங்கரியத்திற்காக, கடமையின்பொருட்டு கண்ணியம் மிகுந்த நீண்ட ஆயுளுக்கும், சுபீட்சத்திற்கும் வம்ச விருத்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன். மிகுந்த கீழ்ப்படிதலுள்ள தங்கள் ஊழியன் ஊழியன் ஏ. ஆர் கிருஷ்ணசுவாமி 72 ஏ, முத்துராமலிங்க வீதி, வேப்பேரி, மதருஸ்.

ஏ! அறிவில்லாத! அடிமையே. இத்தகைய பரிதபிக்கத்தக்க நிலைமையில், சின்னஞ்சிறு உத்தியோகஸ்தர்களின் கதவை ஏன் நீ தட்டுகிருய்? அரசர்களுக்கெல்லாம் மேலான அரசரும், உனது இதய கமலத்தில் வீற்றிருக்கின்றவருமான இறைவனுடைய கதவைத் தட்டுவாயாக. கிர்த்தனை பாடு, ஆண்டவனுடைய நாமத்தைஜபி ஸ்ரீராம் எனும் மந்திரத்தை ஜபிப்பாயாக. உலகச் செல்வம் அனைத்துமன்றி இறைவனுடைய வற்ருத ஆத்மீகப் பொக்கிஷத்தையும் நீ பெறுவாய். நீ அதுவாய் இருக்கின்ருய் - தத்துவம் அஸி.

ஸ்ரீ சுவாமி சிவானந்தா
உதவி - மில்க்வைற்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ. இல MB 12900

அம்மன் வீதி, Dr. வீரவாகு கதிரவேலுப்பிள்ளை பரமநாயகம்
கந்தர்மடம், —வழக்காளி
யாழ்ப்பாணம்.
எதிராக
120/3 அரசடி வீதி. சின்னையா நடராசா சண்முகநாதன்
கந்தர்மடம், யாழப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB 12900-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பினுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1974-ம் ஞு ஆவணி மீ 14-ம் திகதி (14-8-74) புதன்கிழமை காலை 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் வறகப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 17,517/-ம், 28-12-71 தொடக்கம் 21-11-72 வரைக்கும் ரூபா 13,000/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின்முழுத்தீர்வைத்தொகைக்கும்பணம முற்ருகஇறுபடுமவரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 585 - 40சதமும்.

**காணி விபரம்**

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்திறிக்கும், பகுதியும் வண்ணுர்பண்ணை கோவிற்பற்று, வண்ணுர்பண்ணை வடகிழக்கு இறை, "சொட்டிதாழ்வு" (Soddythalvu) நிலபபரப்பு 6 குளி 13½ம். கிணறும். பயிர்களும், கல வீடும, எல்லை கிழக்கு:- ஒழுங்கை, வடக்கு:- கந்தையா பெண் சரஸ்வதிக்கும் தர்மராசா பெண கனகம்மாவுக்குமுரிய ஆதனம், மேற்கு:- கந்தையா கனகரத்தினத்துக்கும் பெண் அன்னம்மாவுக்குமுரிய ஆதனம், தெற்கு:- கருணநிதி பெண் அன்னபூரணத்தின ஆதனம். இதடங்கலும்.

செ. பாண்டித்துரை
மல்லாகம். கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
1-7-74 Commissioner of Sales & Valuer.
D. C. Jaffna. 94 5-7

## பண்ணிசை பரவசப்

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

பற்றி ஆராய்ந்து நல்ல முடிவுகளை எடுத்தல் வேண்டும்" என்ருர்.

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரம்" என்ருர் மணிவாசகர். பாடசாலைகளிலோ. ஆலயங்களிலோ ஏனைய பொது வைபவங்களிலோ திருமுறைகளை ஓதுபவர்கள் பண்ணுக்கிசையப் பொருள் விளங்கப் பாடும் பணியை வளரச் செய்ய வேண்டும். இதுவே சைவத்துக்குச் செய்யக் கூடிய பெருந்தொண்டு" என்ருர் ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம். சங்கீத பூஷணம பி சந்திரசேகரம், இசைமணி பொன். முத்துக்குமாரு உட்படப் பலர் உரையாற்றினுர்கள்.

மன்றச் செயலாளரான தேவார சங்கீதபூஷணம் திரு வே. கனகசுந்தரம் நன்றி கூறினுர். ——

## இசை இறைவனை...

1ஆம் பக்கத்து வளர்ச்சி

சுவாமி நாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு, க கனகராசா மங்கள விளக்கேற்றி வைக்க திரு' எஸ். நாகமுத்து வரவேற்புரை நிகழ்த்தினுர்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் பேசுகையில் 'சங்கீத கதாப்பிரசங்கத்துக்கு நமது நாட்டில் வித்திட்டவர்களில் முக்கியமானவர் ஸ்ரீ சங்கர சுப்பையர் அவர்கள், இக்கலை ஈழத்தில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது கதாப் பிரசங்கத்தை ஒரு பொழுது போக்குக் கலையாக எண்ணுமல் பயனுள்ள கலையாக வளர்க்கவேண்டும். இப் புனிதமான சைவப்பணியில் ஆசிரியர்கள் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்ருர்.

திருமதி. கனகராஜா நல்லபிள்ளை நாகமுத்துவுக்கு மலர்மாலை சூட்டி வரவேற்க, மில்க் வைற் ஸ்தாபனச் சார்பில் திருத் தாளம் வழங்கப்பட்டது. வித்துவான் மு. சபாரத்தினம் திருமதி. மு. பாக்கியம் திரு. ஆ. துரைராசசிங்கம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினுர்கள்.

## அணிந்துரை அரங்கம்

## காந்தி மகான் நற்சிந்தனை

"காந்தி மகான்தந்த நாளொரு நற்சிந்தனை" என்ற நூலை மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகத்தினர் வெளியிட்டுள்ளார்கள்.

சிவநெறிக் காவலர் க கனகராசா அவர்கள் பதிப்புரையிற் குறிப்பிட்டுள்ளவாறு "நாளுக்கொரு சிந்தனையாக ஓராண்டு காலத்துக்குண்டு சீரணிக்கத்தக்க முறையில் இந்நூல் அமைந்துள்ளது தமிழ மக்களுள் தெய்வ நம்பிக்கையும், வழிபாடும், பக்தியும், மெய்ஞ்ஞானமும், தத்துவத் தெளிவும வழிவழி நின்று விளங்கி மன அமைதியும் இன்பமும் எய்தக் காரணமாய் இஃது உதவுவதாக" அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

இல. எம். பி. 13198

மேரி பெல்யுவனிதா ஜெயராசா பராயமற்றதனது அடுத்த நண்பன் செல்லத்துரை றெஜீனேல்ட் ஜெயராசா இல 9. டேவிட்றோட் யாழ்ப்பாணம். வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம் கரையூர் அடப்பன் வீதி

1: சவரிமுத்துபே துருப்பிள்ளையும் பெண் 2. மரியம்மா.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் எம. பி 13198 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1974 ம் ஆு ஆவணி மீ 9 ம் திகதி (9-8-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம அந்தக்காணிக்குள்நின்றுபிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபாய் 2680/ ம் 28-6-72 தொடக்கம் 28-2 73 வரைக்கும் ரூபாய் 2000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 5: 5-45 சதம (செலவுகாசு ரூபா 100/ களித்து)

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாண பகுதி சுண்டுக்குளிக் கோயிற்பற்று கரையூர் இறை குடியிருப்பு வளவு குளி 4½ மேற்படி குடியிருப்பு வளவு குளி 3 தற்போது ஒரே காணியாயிருக்கிறது இவ்விரு பிரிவுக்குங் கூடிய குளி 7½ யும கல்வீடும குசினியும் கிணறும் கற்கூசும் மற்றும அதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கெல்லை கிழக்கு சுவாமபிள்ளை இராயப்பு அந்தோனிப்பிள்ளைக்கும் பெண் லிலாவுக்கும் உரிய ஆதனம் வடக்கு அடப்பன் றோட்டு மேற்கு செபமாலை மகள் மெற்றலின் மதலேனுவுக்குரிய ஆதனம தெற்கு சவிரி வயித்தியின் உரிமைககாரசகுரிய ஆதனம் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

இ. கனகரத்தினம்

கொமிஷனர், விலைமதிப்பாளர்
35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2-7-74

98. 5-7-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ, இல. M. B 12588

1. வேலுப்பிள்ளை இராமலிங்கம் வேதரடைப்பு, காரைநகர் — வழக்காளி

எதிராக

1. கந்தையா சுப்பிரமணியம் கருங்காலி, காரைநகர் மேற்கு — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக கோட்டின் M B 12588 ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணியை 1974 ம் ஆு ஆவணி மீ 5 ம் திகதி (5-8-74) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4,945/- இன்னும் ரூபாய 3000/-க்கு 23-6-71 தொடக்கம 16-3-72 வரைககும் 7 வீத வட்டியும் அதனபின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 493 -85 சதம்

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு மேற்கு இறை 'கொங்கையபுலம்' ப.ர.நில. இலா 5¼ (V; C ) பனைகள் வடலிகள், வீடு செய் பயிர்களுடன் இதற்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கதிரவேலு [illegible] வடக்கு ஒழுங்கை, [illegible] கார்த்திகேசு கணபதிப்பிள்ளையின ஆதனம், தெற்கு கந்தையா திருவத்திரையின் ஆதனம். இதடங்கலும்.

பதிவு இலக்கம் C. 337/214

ப. நா தருமலிங்கம்

[illegible]
167/1 கோவில் வீதி
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்
2-7-74

99. 5-8

---

## Commission Sale

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை றெக்குவெஸ்துக் கோட்டில் வழக்கு இல: 3689

(1) V. சிவப்பிரகாசம் பத்மநாதன் (2) பெண் பொன்னம்மா இருவரும், தும்பளை, பருத்தித்துறை —வழக்காளிகள்

எதிராக

(1) சின்னத்தம்பி முருகேசு, வில்லன்காடு, குடத்தனை —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்களை 1974ம் வரு யூலை மாதம் 18-ம் திகதி (18-7-74) வியாழக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக விருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி குடத்தனைக் கோவிற்பற்று

(1) குடத்தனையிறை "ஓடை வயல்" நெற். பர. 73¼ "உலகிப்பளிககனவயல்" நெற். பர. 85 ஆக நெற. பர. 158¼ எல்லை கிழக்கு வீரகத்திப்பிள்ளை பெண் வளளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம, வடக்கும் மேற்கும் வேலுப்பிள்ளை வயிரமுத்துவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு முருகர் கார்த்திகேசுவுக்கும மறுபேருக்குமுடைய வாதனம், இதடங்கலிற் சொரியலாய் பன்னிரண்டு பரப்பும்.

(மதிப்பிட்ட விலை ரூபா 1,800/-)

(2) ஷெயிறை "கொட்டைப் பொக்கொணுவெளி" நெற் பர. 77 இதில் நெற் பர 12¾ எல்லை கிழக்கு கோணப்பர் கார்த்திகேசுவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு காளிவயற்பிள்ளையார் கோவிலாதனம். மேற்கு வீரகத்தி பெண் மனோன்மணிக்கும மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு வேலுப்பிள்ளை நாகலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இதடங்கலிற் சொரியலாய் மூன்றிலொரு பங்கும்:

(மதிப்பிட்ட விலை ரூபா 1,000)

(3) ஷெயிறை "குடும்பியன வயல்" நெ பர. 84 ஷெ "குடும்பியன் வயல்" நெற் பர 12½ ஆக நெற். பர, 96½ இதிலாட்சிப்படி வட கிழக்குப்புறமாக நெற். பர. 6 எல்லை கிழக்கும் தெற்கும்: சினனவன் கைம்பெண் வள்ளிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு முருகர் கார்த்திகேசுவுக்கும் மறுபேருககுமுடைய வாதனம். மேற்கு சிதம்பரம் அம்பலவாண நடராஜசுவாமி கோவிலுக்குடைய வாதனமும, கணபதிப்பிள்ளை வல்லிபுரத்துக்குடைய வாதனம். இதடங்கலும்.

(மதிபபிட்ட விலை ரூபா 900/-)

(4) ஷெயிறை "குஞ்சுக்காடு" நி பர. 12 பனைகள், தென்னைகளும. எல்லை கிழகக: வேலுப்பிள்ளை பெண் செல்லம்மாவுக்கும் மறுபேருககுமுடைய வாதனம, வடக்கு: கார்த்திகேசு பொன்னையாவுக்கும மறுபேருக்குமுடைய வாதனம். மேற்கு கணபதிப்பிள்ளை பாலசிங்கத்துககும் மறுபேருக்குமுடைய வாதனம், இதடஙகலிற் சொரியலாய் மூன்றிலொரு பங்கும்.

(மதிப்பிட்ட விலை ரூபா 800/-)

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: | ரூபாய் | 500 00 |
| வட்டி ரூபா 250/-க்கு 12 வீதப்படி 14 3-71 தொடக்கம் 14-5-72 வரை | ரூபாய் | 35 00 |
| வட்டி ரூபா 535/-க்கு 5 வீதப்படி 15-5-72 தொடககம் 14-5-74 வரை | ரூபாய் | 53 50 |
| வட்டி ரூபா 588-50க்கு 5 வீதப்படி 16-5-74 தொடக்கம விற்பனை வரை | ரூபாய் | 4 56 |
| கோட்டுச் செலவு | ரூபாய் | 40 00 |
| மொத்தம் | ரூபாய் | 633 06 |

ந. முத்துலிங்கம்

நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பாளர்
ஏல விற்பனையாளர்
(தேசிய வீடமைப்புத திணைக்களம்)

தமரகோட்டம்'
வியாபாரிமூலை,
பருத்தித்துறை. 30-6-74

95, 5-7

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. M. B. 12252

காங்கேசன்துறையைச்சேர்ந்த அருணாசலம் வல்லிபுரம் -வழக்காளி

எதிராக

கந்தரோடையைச் சேர்ந்த நாகராசா கந்தசாமி — எதிராளி

யாழப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M B 12252-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகள் 1974-ம் வரு ஆவணி மாதம் 14-ம் திகதி (14—8—74) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா 3083-33-ம் 21-1-1971 தொடக்கம் 19-10-71 வரைககும் ரூபா 2500/- க்கு 10 வீத வட்டியும அதன் பின் முழுத் தொகைக்கும இறுக்கும வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 391-01 சதமும் ஆகும், தீர்வைத் தொகையில 3000/— கழித்து.

#### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டியில் உள்ள 'கொட்டையன் வலை' என்றழைக்கப்படும நிலப்பரப்பு 3¾ யும் செய்பயிர் வான் பயிர்களுடன எல்லை கிழக்கில் பொன்னுத்துரையின் மனைவி வெள்ளையம்மாவின் ஆதனமும், எல்லை வடக்கில் குச்சொழுங்கையும், எல்லை மேற்கில் கந்தையா கனக மாணிக்கத்தினதும் அவரது மனைவி சரஸ்வதியினதும் கீழ் விபரிக்கப்பட்ட இரண்டாவது காணியும் எல்லை தெற்கில் சிவசம்பு நாகராசாவினதும் ஆதனங்கள். இவை முழுவதிலும் கிழக்கெல்லையில் காட்டப்படும் கிணற்றில் பங்கும் உபயோகிப்பதற்கு வழி வாய்க்காலும் உண்டு.

மேற்படி 'கொட்டையன் வலை' என்றழைக்கப்படும் நிலப்பரப்பு 1¾. தென்னை மரங்களுடன் எல்லை கிழக்கில் மேற் குறிப்பிட்ட காணியும் எல்லை வடக்கில் கந்தையா கனகமாணிக்கத்தினதும் அவரது மனைவி சரஸ்வதியினதும் ஆதனமும், எல்லை மேற்கில் ஒழுங்கையும், எல்லை தெற்கில் சிவசம்பு நாகராசாவினதும் ஆதனங்கள். இதனடங்கிலும் கிழக்கெல்லையில் காட்டப்பட்ட காணியில் கிணற்றுப் பங்கும் உண்டு.

சி. ஆ. த. வடிவேலு J. P.
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்

"வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்
27-6-74,

92, 5-8

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

(1) சுப்பையா பேரம்பலமும், மனைவி
(2) சாரதாமணி இருவரும், மாபண்ணவூரி
காரைநகர் வடக்கு, — வழக்காளி

வழ. இல. M B 12705 எதிராக

நீலகண்டன் கேசவன், 243, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின M B 12705ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974ம் வரு ஆவணிமீ 5-ம் திகதி (5-8-74, திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 12,997 - 40ம், 16-8-71 தொடக்கம் 21-3-72 வரைககும் ரூபாய் 10,000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 521 - 90 இதில் கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 6,200/- 23—8—72 ரூபாய் 2,000/-, 29—1—73 ரூபாய் 1,000/-, 5 — 11 — 73 கோட்டுச் செலவால் ரூபாய் 435/—

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "நீர்நொச்சியடி" நில. லா. 2 இது 26-6-1957ல் 354 இலக்கத்தால், உலாந்தா T. கந்தையா அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு எல்லை கிழக்கு:- நாகமுத்து வீரசிங்கத்தின் ஆதனமும், பெண் தையல்முத்துவுக்குமுரிய ஆதனமும், வடக்கு:- சரவணமுத்துவின் கைம்பெண் இராசம்மாவுக்கும் பிள்ளைகளுக்குமுரிய ஆதனம், மேற்கு:- கந்தையா செல்லத்தம்பிக்குமுரிய ஆதனம, தெற்கு:- 4ம இலக்கத்துண்டு இதில் மேற்குப் பக்கமாக 26—11—68 இல் 4262ம இலக்கத்தால், T. கந்தையாவால் தயாரிக்கப்பட்டபடத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ள நில. பர. லா. 1 குழி 3¾ம், கல் வீடும் இதற்குரிய எல்லை கிழக்கு:- விற்பனவுகாரனின ஆதனம், வடக்கு:- சரவணமுத்து கைம்பெண் இராசம்மாவுக்கும் பிள்ளைகளுக்குமுரிய ஆதனம். மேற்கு:- கந்தையா செல்லத்தம்பிக்குரிய ஆதனம். தெற்கு:- ஒழுங்கையாக பாவிக்கப்படும் 4ம் இலக்கத் துண்டு. இதடங்கலும.

இ, செ. பாலசிங்கம்
கொமிஷனர், விலைமதிப்பாளர்

அராலி வடக்கு
வட்டுக்கோட்டை, 27-6-74.

91 5-7

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

நெடுந்தீவு மத்தி
நெடுந்தீவு
சின்னத்தம்பி குமாரசுவாமி —வழக்காளி

வழ. இல. M. B. 10480 எதிராக

வண்ணாபண்ணை கிழக்கு
(1) வேலுப்பிள்ளை சண்முகம் (மரணம்)
(2) பெண மாணிக்கம் (2ம் எதிராளி தற்போது வி சண்முகததின் கைம்பெண் 1ம எதிராளியின் ஆஸ்த்திக்கு பிரதி காரியஸ்தராகவும் —எதிராளி

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் M B 10480ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் வரு யூலை (ஆடி)மீ 17-ந் திகதி (17-7-74) புதன்கிழமை முற்பகல 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீாவைத்தொகை; முதல் வட்டி ரூபாய் 2355/- இதில் ரூபாய் 1500/-க்கு 19-12-68 திகதி தொடக்கம் 14-12-69 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 319 - 72 சதம்

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை 'நீர்நொச்சியடியும் கட்டைக்காடும்'' நிலப்பரப்பு 17 இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் T. சின்னத்துரையால் 9-6-54 இல் 544ம் இலக்கப் படத்தில் 5ம் துண்டுக்கு நிலப்பரப்பு 1ம் குளி 8. 1/8ம் இதில் முழுக்காணியில் பாதைக்கும் கையொழுங்கைக்கும் விடப்பட்டதும் மேலும் E. பளனித்துரைக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4018ம் இலக்க வழக்கில் விடப்பட்ட குளி 2ம் நீங்கலாக நிலப்பரப்பு 1ம் குளி 8, 1/8ம் கிணற்றுப் பங்கும் தூர்வையும் ஆடுகாலும் இது குறித்த படத்தில் 2ம் துண்டாகவும், பாதைப் பங்கும் மற்றும் பயிர்களும எல்லை கிழக்கு:- E பளனித்துரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு:- குறித்த படத்தில் 4ம் துண்டு E. மாணிக்கத்திற்கும் பெண் செல்லமுத்துவுக்குமுரிய ஆதனம்; மேற்கு:- புதிதாக விடப்பட்ட பாதை குறித்த படத்தில் 1ம் துண்டு தெற்கு:- சுப்பர் கந்தையாவின் ஆதனம். இதடங்கலும்

முற்பதிவு D 258/261

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனர் & விலைமதிப்பாளர்

தெல்லிப்பளை
21-6-74

97 5-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியாளர்களையும் ஏற்றுமதியாளர்களையும் எம்முடன் ஆங்கில மொழியில் தொடர்புகொள்ளுமாறு நாம் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

# மேற்கு நைஜீரியாவுக்கு

# ஏற்றுமதி

வெல்டிங் மின்வாய்கள் நுண்ணிய வளைவுடன் 2 மி. மீ.,
மோட்டார் வாகனங்களுக்குரிய "வின்ட் ஸ்கிறீன்",
ட்ரூன்சிஸ்டர் கசற் ரேப் றெக்கோடர்கள்,
கார் கார்ட்றிச் பிளேயர்ஸ்,
பெஸ்பெக்ற் 5 மி. மீ., அளவு 8' × 4', 6' × 4'
விமான அஞ்சற் கடித அட்டைகள்,
எல்லா வகையான கட்டிடப் பொருட்கள்,
பல்வேறு வகையான துணி வகைகள்,
வாள்சங்கிலிகள் ·063 அங். தடிப்பு; 4·04 அங். ஆழம்; 36'' அங். நீளமுள்ள வழிச்சட்டங்களில் பயன்படுத்துவதற்கு,
அலுவலக உபகரணங்கள்,
விசிறு கருவிகள்,
வெஸ்பா டயர்கள்,
திரைகளுக்கான கம்பித் தடிகள்,
சங்கிலி வாள் அரங்கள் 7/32'' அங்குலம்,
பெண்களுக்கும் ஆண்களுக்குமான சப்பாத்துக்களும் சான்டல்களும்,
சேட்டுக்கள்,
பெண்களுக்கான அரைக் கச்சைகள்,
காற்சட்டைகள்,
உதைபந்துகள்,
மேலாடைகள், உள்ளாடைகள், எல்லா வகையான றெடிமேட் உடுப்புக்கள்,
பைசிக்கிள் வண்டிகளும் அவற்றின் உதிரிப் பாகங்களும்,
தொப்பிகள்,
குல்லாய்கள்,
தட்டையான கம்பி வடங்கள் 3·029 மி. மீ. தடிப்புள்ளவை,
வெல்டிங் (ஒட்டும்) யந்திரங்கள்,
கம்பித் தடிகளுக்கான கொளுக்கிகளும் சாவிகளும்,
எல்லா வகையான மின்சார சாதனங்கள்,
கைக்கடிகாரங்கள்,
காப்புகள்,
கசெற் சி 60 & சி 90,
மோட்டார் வண்டி ஜாக்குகள்,
(ஒலிவ் எண்ணெய் உட்பட) எல்லா வகையான தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகளும்.
மட்பாண்டங்கள் (பிங்கான்கள்),
படுக்கை விரிப்புக்கள்
தலையணை உறைகள், மற்றையனவும்.

விலை (*C. I. F.*), காப்புறுதி, கப்பற் கட்டணம் முதலியவை உட்பட விலைக்கூற்றும், சாம்பிள்களும் அஞ்சல் அலுவலகம் மூலம் விமானப் பொதி அஞ்சலில் நேரடியாகப் பின்வரும் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்:-

## Taofiki Taokeed & Sons,

SW 8/427 B, Aiyankoya Street,
Oke-Ado, Ibadan, WESTERN NIGERIA.

ADVT. 964/74/0/1.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன் கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை, காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் 5-7-74 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பிரதம ஆசிரியர்: திரு. நம. சிவப்பிரகாசம்; ஆசிரியர்: ம. மயில்வாகனம்